## 10

# தொழுகையைக் குறித்து கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பது என்ன

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:24) என்று இயேசு சொன்னார். தேவனில் விசுவாசம் கொண்டிருந்த அனைவருமே எப்போதும் அவரைத் தொழுது கொண்டார்கள். இன்று கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்வோர் ஏதோ ஒரு வகையில் தேவனைத் தொழுது கொள்கிறார்கள். சில சபைகளில் பாதிரியார்கள் ஒரு ஜெப புத்தகத்திலிருந்து வார்த்தைகளை ஒப்பிக்கிறார்கள், அதையும் அந்த சபையார்கள் எவ்வித அறிந்து கொள்ளும் ஆற்றலின்றி வழக்கமாக ஏற்றுக் கொண்டு போகின்றனர். சிலர் தங்கள் விருப்பம் போல் சுதந்திரமாய் தொழுகை நடத்துகின்றனர்; அவர்களுடைய நாமகரண (பிரிவு)க் கூட்டத்தால் அங்கு பயன்படுத்தப்படும் பாடங்களும் ஜெபங்களும் தொகுக்கப் பட்டிராது. இன்னும் சிலர் பரிசுத்த ஆவியானவர் தொழுகைகளில் அசைந்து கொண்டிருப்பதாக வலியுறுத்துகின்றனர்; இந்தக் கூட்டாத்தாருக்குள் அந்நிய பாஷைகளில் பேசுவது ஒரு பொதுவான பழக்கம். சில தொழுகைகளெல்லாம் அமைதியாக நடந்தேறுகின்ற வேளையில், தியானத்தை மையமாகக் கொண்டு அமைதியான முறையில் தொழுகை ஜெபங்கள் ஏறெடுக்கப் படுகின்றன, வேறு குழுக்கள் ஆரவார சத்தத்தோடும் ஆவேச வெறித்தனத்தோடும் இருக்கும். வித்தியாசப் பட்ட மத ரீதியான கூட்டங்களில் பாடகர் குழு அமைத்து, ஆர்மோனியம் போன்ற அமைதியான இசைகளையோ அல்லது இசைக்குழு வாத்தியங்களை இசைத்து இரைச்சல்களோடே ஆராதனை செய்கின்றனர்.

தேவன் விரும்புவது என்ன? சபையிலே தேவனை தொழுதுகொள்ளும் விஷயத்தில் நாம் விசுவாசிக்க வேண்டியது என்ன?[1] நமது தொழுகை தேவனை பிரியப்படுத்துகிறது என நமக்கு எப்படித் தெரியும்? *கிறிஸ்தவர்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் என்பதை விசுவாசிக்கின்றனர்.* கிறிஸ்து இயேசு இந்த வசனப்பகுதியில் வெளிப்படுத்தி இது குறித்து சொன்ன உண்மையைப் பார்த்து, பின்பு அது போதிக்கும் மூன்று சத்தியங்களை ஆராய்வோமாக.

### இயேசுவின் அறிக்கையின் பொருளடக்கம்

இயேசு ஒரு சமாரிய ஸ்திரீயினிடம் குடிக்கக் கேட்கிறார். ஒரு யூத மனிதன், சமாரிய ஸ்திரீயாகிய தன்னிடத்தில், குடிக்கும்படி (தண்ணீர்) கேட்டது குறித்து,

அவள் மிகுந்த ஆச்சரியமடைந்தாள். அவர் மறுமொழியாக தாம் அவளுக்கு ஜீவத் தண்ணீர் கொடுக்கக் கூடும் என்று குறிப்பிடுகிறார். அவள் அதைத் தனக்குத்தர வேண்டும் என்று கேட்டபோது, அவள் போய்த் தன் புருஷனைக் கூட்டி வரும்படி அவர் சொன்னார். அவள் தனக்கு புருஷன் இல்லை என்று சொன்னபோது, இயேசு அவளுக்கு மறுமொழியாக, "எனக்கு புருஷன் இல்லையென்று, நீ சொன்னது சரிதான்; எப்படியெனில், ஐந்து புருஷர்கள் உனக்கு இருந்தார்கள், இப்போது உனக்கிருக்கிறவன் உன் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய்" என்றார் (யோவான் 4:17, 18). அந்த ஸ்திரீ இயேசுவை ஒரு தீர்க்கதரிசியாக உணர்ந்தாள், பிறகு - தனது ஒழுக்கமற்ற சூழ்நிலை சுட்டிக் காட்டப் பட்டதை மறைத்து நெடிய நாட்களாக இருந்து வந்த இறையியல் பிரச்சனை பக்கம் உரையாடலை திசை திருப்புவதாக எண்ணி - அவள், "எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுதுகொண்டு வந்தார்கள், நீங்கள் எருசலேமிலிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும் என்கிறீர்களே" என்றாள் (யோவான் 4:20).

அதற்குப் பதிலளித்த இயேசு, "ஸ்திரீயே நான் சொல்லுகிறதை நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளும் காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதை தொழுது கொள்ளுகிறோம், ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" (யோவான் 4:21, 22). தேவனைத் தொழுகொள்ளுகிற விஷயத்தில் விரைவில் இடம் முக்கியத்துவமில்லாது போகும், என்று இயேசு சொன்னார். ஆயினும், அந்த விஷயத்தில் தற்போதைக்கு - சரியாகவே யூதர்கள் செயல் படுகின்றனர் - என்பதை உறுதிப் படுத்தினார். சமாரியார்கள் என்ன செய்கிறார்கள் என்று அறியாதிருந்தனர்; ஆனால் யூதர்கள் அறிந்திருந்தனர். ஆகையால், இடத்தைப் பொறுத்தமட்டில், மோசேயின் நியாயப்பிரமாணம் அமலில் இருக்கும் காலம் வரை, யூதர்கள் சத்தியத்தின்படி ஆராதித்துக் கொண்டிருந்தனர்.

ஆயினும் இயேசு தொடர்ந்து குறிப்பிடுகையில், "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்" என்றார் (யோவான் 4:23, 24).

இயேசுவின் உபதேசத்தின்படி, சரியான இடத்தில் ஆராதிப்பது மாத்திரம், இனியும் போதுமானதாக இருப்பதில்லை. மக்கள் தொடர்ந்து சத்தியத்தின்படி தேவனைத் தொழுதுகொண்டிருக்கவேண்டுமென இயேசு விரும்பின அதே வேளையில் - அந்த நேரம் முதல் - ஆவியோடும் தேவனை தொழுதுகொள்ள வேண்டும் என்று அவர் ஜனங்களிடத்தில் விரும்பினார். அவர் குறிப்பிட்டதன் பொருள் என்ன? "உண்மையோடும்" (சத்தியத்தோடும்), நாம் தேவனை தொழுது கொள்ளுவது தேவனுடைய வசனத்தின்படியானதாக இருக்க வேண்டும் என்னும் பொருளில் சொன்னார் (காண்க யோவான் 17:17). "தேவனை ஆவியோடு" தொழுது கொள்ள வேண்டும் என்று அவர் சொன்னதன் பொருள் என்ன? தேவன் ஆவியாயிருக்கிறபடியால், நாமும் தொழுதுகொள்ளும்போது

ஆவிக்குரியவர்களாகி அவருடைய தன்மைக்குட்பட வேண்டும். "ஆவியோடு" தொழுதுகொள்ளுதல் என்பது, குறிப்பிடப்பட்ட இடத்தில்தான் தொழுது கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துக்கு முரணானது; தொழுகை உள்ளான மனுஷனுக்குரியதேயன்றி புறம்பான மனுஷனுக்குரியதல்ல. அது "ஆவிக்குரிய" தன்மையேயன்றி, சரீரத்துக்குரிய தன்மையல்ல, உண்மையான தொழுகை என்பது மனதையும் இருதயத்தையும் சம்பந்தப்படுத்தியது, வெறும் வெளிப்படையான செயலையல்ல.

இயேசுவின் போதனை யூதர்களுக்கும் சமாரியர்களுக்குமான போதனையாக இருந்தது. சமாரியர்கள் சத்தியத்தின் முக்கியத்துவத்தை உணர வேண்டியவர்களாய் இருந்தனர். ஆராதிப்பதில் சரியான எண்ணம் அவர்கள் கொண்டிருந்தாலும், தவறான இடத்தில் அவர்கள் செய்த ஆராதனை பயனற்றதாயிருந்தது. யூதர்கள் சரியான ஆவியோடு ஆராதிக்க வேண்டிய அவசியத்தை அவர்கள் உணர வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் சத்தியத்தின்படி ஆராதித்தாலும் - அதாவது, சரியான இடத்தில் அவர்கள் ஆராதித்தாலும் - அது அவர்களுடைய இருதயத்தின்படி சரியானதாக இல்லாவிட்டால் அந்த ஆராதனை போதுமானதல்ல, அவர்கள் அன்பில்லாதவர்களாயும், நன்றியறிதல் இல்லாதவர்களாயும், நியாயந்தீர்க்கிறவர்களாயும், மாய்மாலக்காரர்களாயும் தேவனுடைய பார்வையில் தங்கள் ஆராதனையை தீட்டுள்ளதாக மாற்றுவார்கள். தவறான வழியில் ஊக்கமான ஆராதனை செய்வது இயலாதது, எழுதப்பட்ட விதிகளின்படி ஆராதிப்பது போதுமானதல்ல; உண்மையாக தேவனைத் தொழுதுகொள்வோர் சரியான வழியில் சரியான இருதயத்தோடு தொழுது கொள்ள வேண்டும் என்று இயேசு சொன்னார்!

## இயேசுவின் வாக்கியத்தில் எதிர்பார்க்கும் மூன்று தேவைகள்

யோவான் 4:24ல் இயேசு குறிப்பிட்டவை, இன்று நமது ஆராதனைக்குத் தேவைப்படும் மூன்று தேவைகளை சுட்டிக்காட்டுகின்றன.

### தொழுகை

கிறிஸ்தவ யுகத்தில் தேவனைப் பிரியப்படுத்த விரும்புவோர் தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும் என்று இயேசு குறிப்பாகச் சொன்னார். தனிப்பட்ட முறையிலே அவருடைய வசனங்களை வாசித்து ஜெபம் பண்ணி, நமக்குள் பாடல்களைக் கூட பாடி தேவனைத் தனிப்பட்ட முறையில் நாம் தொழுது கொள்ளலாம். (காண்க யாக்கோபு 5:13; நடபடிகள் 16:25) ஆயினும், இன்று கிறிஸ்தவர்கள், ஒன்றுகூடித் தம்மை உள்ளூர் சபையாக ஒன்றாகச் சேர்ந்து ஆராதிப்பதை தேவன் விரும்புகிறார் (எபிரெயர் 10:24, 25; காண்க 1 கொரிந்தியர் 14).

### ஆவியோடு தொழுதல்

நாம் ஆவியோடு தொழுகை செய்ய வேண்டும். நாம் எப்படி தேவனை "ஆவியோடு தொழுதுகொள்ளுவது?" ஆவியோடு தொழுதுகொள்ள எப்படிப்பட்ட இருதயம், மனம் அல்லது எண்ணப்போக்கு தேவை?

*நாம் இருதயத்தில் தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும்.* 1 கொரிந்தியர் 14ல் பவுல் அதில் பங்கேற்போருக்கு எந்தவித அர்த்தத்தையும் கொண்டிருப்பதில்லை மற்றும் பார்வையாளர்களுக்கு எந்தவித மதிப்பையும் கொண்டிருப்பதில்லை என்று தெளிவாகப் பேசுகிறார். அவர், "நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன், ஆவியோடும் பாடுவேன், நான் கருத்தோடும் பாடுவேன்" என்றார் (1 கொரிந்தியர் 14:15).

*நாம் நன்றியுள்ள இருதயத்தோடு தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும்.* எபேசியர் 5:18-20 சொல்கிறது,

> ... ஆவியினால் நிறைந்து; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து.

கொலோசெயர் 3:16 அறிவிக்கிறது, "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி." நாம் நம்முடைய நன்றியுள்ள இருதயத்துடன் - "ஸ்தோத்திரத்துடன்," "எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரித்து" பாடவேண்டும். நாம் தேவனைத் தொழுதுகொள்ளும்போது, நமது இருதயங்கள் தேவனுடைய பெரிதான ஆசீர்வாதங்களுக்காக நன்றியுள்ளவர்களாய் அவருக்கு துதி செலுத்துவது நிரம்பித் ததும்ப வேண்டும்.[2]

*நாம் தேவனை தாழ்மையுள்ள இருதயத்துடன் தொழுதுகொள்ள வேண்டும்.* மற்ற கிறிஸ்தவர்களுடன் நாம் தொழுகைக்கு கூடிவரும்போது, லூக்கா 18:9-14ல் சொல்லப்படுகிற ஆயக்காரனுடைய எண்ணங்களைப் போன்றதாக நம்முடைய எண்ணங்களுமிருக்கவேண்டும்: "தேவனே பாவியாகிய என்மேல், கிருபையாயிரும்" (வசனம் 13; லூக்கா 17:10யும் காண்க). இந்த உவமையைச் சொல்லி, அந்த ஆயக்காரன் நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டிற்குப் போனான் என்று இயேசு சொல்லுகிறார் (லூக்கா 18:14), அந்த சுய நீதிமானாக்கிக் கொண்ட பரிசேயன் நீதிமானாக வீட்டிற்குத் திரும்பிப் *போகவில்லை* என்றும் சொன்னார். பரிசேயன் பாவத்துக்கு மன்னிப்பைக் கோரவில்லை ஆதலால் எதுவும் பெற்றுக் கொள்ள வில்லை; ஆகையால், அவன் நீதிமானாக்கப்படாமல், இரட்சிக்கப்படாத நிலையில் திரும்பிப் போனான்.

*நாம் மன்னிக்கும் இருதயமுள்ளவர்களாய் தேவனை தொழுது கொள்ள வேண்டும்.* நமது ஆராதனையில் தேவனுடைய மன்னிப்பை நாம் தேடுவது மட்டுமல்ல, நாம் மற்றவர்களையும் மன்னிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறோம். மற்றவர்களை மன்னிப்பதற்கான நம்முடைய ஆர்வத்தை சார்ந்தே நம்முடைய மன்னிப்பு இருக்கும்படி இயேசு செய்திருக்கிறார் (மத்தேயு 6:14, 15). ஒருவர் தன்னுடைய சகோதரனிடத்திலிருந்து தம்மை பிரித்து வைத்துள்ள எந்த பிரச்சனையாக இருந்தாலும் அதை சரிசெய்யாமல் ஆராதனையில் தேவனை ஒருவர் அணுக இயலாது (மத்தேயு 5:23, 24).

*நாம் தேவனை அன்பின் இருதயத்தோடு தொழுதுகொள்ள வேண்டும்.* தேவனிடத்தில் நாம் வைத்துள்ள அன்பு அவரை நாம் தொழுது கொள்ளச் செய்கிறது, ஆகிலும் நாம் ஆராதனையில் கூடிவரும்போது, நம்மோடு தொழுகை செய்கிற மற்றவர்களிடத்திலும் அன்பு வைக்க வேண்டும். ஒன்றிணைந்த ஆராதனை என்ற கருத்து - சரீரத்தின் தொழுகை - ஒருவருக்கொருவர் பயனுள்ள வகையில் அமைய வேண்டும். நாம் ஒன்றாகக் கூடிவரும்போது ஒருவருக்கொருவர் ஊக்கம் அளிக்கக் கூடியவர்களாயிருக்க வேண்டும் (எபிரெயர் 10:24, 25). நாம் பாடும்போது "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொள்கிறோம்" (எபேசியர் 5:19), "ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லுகிறோம்" (கொலோசெயர் 3:16). நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும் போது கூட, நம்மை நாம் சோதித்தறிய ("நிதானித்து"; KJV) சரீரத்தை சரியாக நிதானித்து அறியவேண்டும் (1 கொரிந்தியர் 11:29). இது சபையை, கிறிஸ்துவின் சரீரத்தைக் குறித்து பேசுகிறது. நாம் ஒன்றிணைந்து தொழுகை செய்யும் போது, சரீரத்தின் அங்கத்தினர்கள் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கப் படுகின்றனர். ஒன்றிணைந்த ஆராதனையின் விளைவாக ஐக்கியமுண்டாகிறது, உண்டாக வேண்டும் (காண்க ரோமர் 15:5, 6).

*நாம் தேவனை முழு இருதயத்தோடும் தொழுதுகொள்ள வேண்டும்.* "அல்லேலுயா, செம்மையானவர்களுடைய சங்கத்திலும் சபையிலும் கர்த்தரை முழு இருதயத்தோடும் துதிப்பேன்" (சங்கீதம் 111:1; KJV). உண்மையாய் தொழுது கொள்பவர் தொழுகையில் முழுமையாய்த் தன்னை ஊற்றிவிடுகிறார். தொழுகை நேரம் "பிளவு பட்ட" இருதயத்திற்குள்ள நேரமல்ல (யாக்கோபு 1:6-8). உலகக் காரியங்களை நினைத்துக் கொண்டு ஒருவர் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்த இயலாது.

*நாம் தேவனை ஏற்றுக் கொள்ளக்கூடிய இருதயத்துடன் தொழுதுகொள்ள வேண்டும்.* தொழுகை விஷயத்தில் நாம் கொர்நெலியுவைப் போல் இருக்க வேண்டும், அவன் பேதுருவினிடத்தில், "தேவனாலே உமக்குக் கட்டளையிடப் பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவ சமூகத்திலே கூடியிருக்கிறோம்" என்றான் (நடபடிகள் 10:33ஆ). போதனையைக் கேட்கவும் அறிவுறுத்தும்படியும் ஆயத்தமுள்ளவர்களாக சபைகூடுதலில் பங்கேற்பது நமது கடமை.

*உற்சாகமான இருதயத்துடன் நாம் தேவனைத் தொழுதுகொள்ள வேண்டும்.* "உங்களில் ஒருவர் துன்பப்படுகிறாரா? அவர் ஜெபிக்க வேண்டும். ஒருவர் உற்சாகமாய் இருக்கிறாரா? ஸ்தோத்திரப் பாடல் பாட வேண்டும்" (யாக்கோபு 5:13). கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் பாடுகிறோம்? நாம் தேவனால் அப்படி ஆசீர்வதிக்கப் பட்டிருப்பதால், நமது நன்றியறிதல் சந்தோஷத்தால் பொங்கி வழிகிறது. நமது சந்தோஷமும் துதியும் பாடல் வடிவில் வெளியாகிறது (நடபடிகள் 2:46ஆ, 47; 16:25; சங்கீதம் 122:1).

*நாம் தேவனை கொடுக்கும் இருதயத்தோடு தொழுதுகொள்ள வேண்டும்.* நாம் வாரத்தின் முதல் நாளில் தொழுகைக்காக கூடிவரும்போது நமக்கு உள்ளவற்றைக் கொடுக்க வேண்டும் (1 கொரிந்தியர் 16:1, 2). ஆகிலும் ஆராதனையில் அதற்கு மேலாக கொடுக்கிறோம். நாம் பாடல்களைப் பாடும்போது, "தேவனுக்கு நாம் துதிகளைச் செலுத்துகிறோம்" (எபிரெயர் 13:15); நம்முடைய ஜெபங்கள் தூப வர்க்கம் புகைக்கப் படுவது போல் தேவனிடத்தில்

செல்லுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 5:8). இந்த புதிய உடன்படிக்கை யுகத்தில் நாம் மிருகபலிகளை தேவனுக்குச் செலுத்துவதில்லை. மாறாக, பாடும்போது, நாம் துதிகளை வெகுமதியாகச் செலுத்துகிறோம்! நாம் ஜெபிக்கும் போது சுகந்த வாசனையான வணக்கத்தை அவருக்குச் செலுத்துகிறோம்.

*நாம் தேவனை தொழுதுகொள்ளும்போது கற்பனைத் திறன் கொண்ட இருதயத்துடன் தொழுது கொள்ள வேண்டும்.* நமது தொழுகையின் அனுபவங்களால் மிகப் பெரிய நன்மையடைய வேண்டுமானால் நாம் கற்பனைத்திறனும், படைக்கும் ஆற்றல் மிகு மனதும் நமக்குத் தேவை. அதை செயல்படுத்த வேண்டும். உதாரணமாக, நம்முடைய பாடல்களின் வார்த்தைகள், நமது இருதயத்தைத் தூண்டி நமது எண்ணங்களை எழுச்சியடையச் செய்வதற்கே. இதனால் நாம் வார்த்தைகளை மட்டும் பாராமல் அவைகள் முன்வைக்கும் கற்பனைகளையும் காண்கிறோம். ஒரு வகையில் அவைகள் கொடுக்கும் விளக்கங்களின் அடிப்படையில் கற்பனைகளை பகிர்ந்து கொள்ளும் அனுபவத்தைப் பெறுகிறோம். தேவனையும் அவருடைய வசனங்களையும் சிறப்பாகப் புரிந்து கொள்வது நமது கூட்டுத் தொழுகையின் பிரதிபலன். நம்மிடத்தில் அன்பு வைத்து தமது குமாரனை நமக்காக பலியாக்கின தேவனுடைய பிரசன்னத்தின் விளைவாக சிந்தும் கண்ணீர் இன்னும் சிறப்பான பிரதிபலன்.

**உண்மையோடு (சத்தியத்தோடு) ஆராதித்தல்**

நாம் தேவனை ஆவியோடு மட்டுமல்ல உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் - அதாவது, தேவன் விரும்புகிற வழியில், அவருடைய வார்த்தையாகிய திருமறை குறிப்பிடும் வழியில் தொழுது கொள்ளுதல். உள்ளூர் சபையின் அங்கத்தினர்களாகிய நாம், உண்மையோடு தேவனைத் தொழுது கொள்ள வேண்டுமாயின், நாம் என்ன செய்ய வேண்டும்?

*தேவனை ஒழுங்கு தவறாமல் தொழுகை செய்யுங்கள்.* சபை கூடிவருதலை விட்டுவிடாதபடி இருக்க கிறிஸ்தவர்களுக்குச் சொன்ன எபிரெய எழுத்தாளர் (எபிரெயர் 10:25), அவர் முழு உள்ளூர் சபைக்கும் தனிநபர்களுக்கும் சொன்னார்.

*வாரத்தின் முதல்நாளாகிய கர்த்தருடைய நாளிலே தேவனைத் தொழுது கொள்ளுங்கள்.* புதிய ஏற்பாடும் (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 16:1, 2) ஆரம்ப கால கிறிஸ்தவ எழுத்தாளர்களும் ஆதிச் சபை தொழுகைக்கென வாரத்தின் முதல் நாளில் கூடி வந்தனர் என்று சான்றளிக்கின்றனர்.

*வாரத்தின் முதல்நாளிலே கூடிவரும் பொழுது, ஐக்கிய விருந்தாகிய கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெறுங்கள்.* அப்போஸ்தலர்களின் வழிகாட்டலில், வாரத்தின் முதல் நாளில் கூடிவந்த போது முதல் நூற்றாண்டு சபை கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றது (நடபடிகள் 20:7).

*நமக்கு உண்டானவைகளை வாரத்தின் முதல் நாளில் கொடுக்க வேண்டும்.* புதிய ஏற்பாட்டு சபை விற்பனைகள் செய்தோ நிகழ்ச்சிகள் நடத்தியோ அதற்கான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை, மாறாக அதன் அங்கத்தினர்கள் அளித்த மனவிருப்பக் காணிக்கையைப் பெற்று பராமரித்தனர். வாரத்தின் முதல் நாள் தோறும் அவர்களுக்கு உண்டாகியிருந்த வரவுகளிலிருந்து கொடுக்கும்படி கட்டளையிடப் பட்டனர் (1 கொரிந்தியர் 16:2).

*நாம் கூடிவரும்போது ஒன்றிணைந்து ஜெபிக்க வேண்டும்* (நடபடிகள் 2:42). சபையாராக கூடிவந்து தொழுகை செய்யும்போது ஒன்றிணைந்து ஜெபிப்பதில் யாரும் குற்றங் காண முடியாது.

*தேவ வசனம் போதிக்கப்படுகையில் ஒன்றிணைந்து கேட்டுக் கற்றுக் கொள்ளுங்கள்* (நடபடிகள் 2:42; 20:7). முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபைகள் கூடிவரும்போது தேவனுடைய போதனைகளை கவனித்திருப்பது முக்கியத்துவமுள்ளதாயிருந்தது. அதேபோல, தேவன் விரும்புகிறபடி இருக்க விரும்பும் சபைகள் இன்றைக்கு தேவனுடைய வசனம் போதிக்கப் படுவதற்கும் பிரசங்கிக்கப் படுவதற்கும் மாற்றுக் காரியங்கள் (ஈடு இணை) இல்லை என்று கருதினர்.

*தொழுகைக்கென கூடிவரும்போது ஒன்றிணைந்து பாடுங்கள்* (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). ஒவ்வொருவரும் பாட வேண்டியவர்கள். ஆதி சபைகளிலே பாடல் குழுக்களாலோ, தனிப்பட்ட நபர்களாலோ இசையெழுப்பப் படவில்லை. பாடுதல் வாய்ப் பாட்டுக்களாக (குரலிசையாக) இருந்தனவேயொழிய, கருவிகள் கொண்டு இசை எழுப்பப் படவில்லை. புதிய ஏற்பாடும் சபையின் வரலாற்று ஆசிரியர்களும் இதைச்சாட்சியிடுகின்றனர். இன்று நமது சபையின் தொழுகையில் எப்படிப்பட்ட இசை சரியானதாக இருக்கும் என்று தீர்மானிக்கும்போது முதல் நூற்றாண்டில் ஆராதிக்க வேறு மாற்றுவழிகளும் இருந்தன என்பதை நாம் உணரவேண்டும். வாத்திய இசைகள் தனிப்பட்ட விசேஷங்கள் மற்றும் பொதுவான நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப் பட்டன, யூத மார்க்கத்தில் தேவாலயங்களில் கருவிகளின் இசை வாசிக்கப் பட்டன. ஆதலால் அவைகள் முற்றிலும் சபையின் ஆராதனையிலிருந்து ஏவப்பட்ட அப்போஸ்தலர்களின் வழிகாட்டுதலின்படி வேண்டுமென்றே நீக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் மனமுவந்து இசைக் கருவிகளை தவிர்த்திருப்பார்களேயானால், ஏதோ ஒரு காரணத்துக்காக அவர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். என்ன காரணம்? ஏனெனில் கிறிஸ்தவ யுகத்தில் தமது சபையாரால் இசைக் கருவி பயன்படுத்துவதை தேவன் விரும்பாமல் இருந்திருக்கலாம்!

## முடிவுரை

நாம் இன்று எப்படி ஆராதிக்கிறோம் என்பது எதுவும் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறதா? ஒருவரது இருதயம் சரியானதாயிருக்கும் வரை, அவர் எப்படிப்பட்ட தொழுகையை செய்கிறார் என்பது குறித்து தேவன் அக்கரை காட்டுவதில்லையா? இதற்கு ஒரு வகையில் பதில் அளிக்க வேண்டுமாகில், தம்முடைய ஜனங்கள் தம்மை எப்படி தொழுது கொள்கிறார்கள் என்பதில் தேவன் எப்பொழுதுமே அக்கரையுள்ளவராக இருந்திருக்கிறார். தொழுகையில் தேவன் என்னத்தை எதிர்பார்க்கிறார் என்று அறிந்து செயல்பட வேண்டிய அவசியமில்லை என நினைப்போர், அவருடைய வசனங்களை பிரசங்கிக்கவோ அல்லது அவரது வசனத்தைக் கைக்கொள்வதிலோ தவறுகின்றனர் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும் (*காண்க கலாத்தியர் 1:8, 9; 2 யோவான் 9; மத்தேயு 15:9; வெளிப்படுத்தின விசேஷம் 22:18, 19*).

இயேசு கிறிஸ்துவை பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் சபைகள் நடத்தும் பலதரப்பட்ட தொழுகை அமைப்புகள் பற்றி என்ன?

*“வித்தியாசப்பட்ட ஒழுங்கமைப்புகள் தொழுகைகளைக் குறித்து ஜனங்கள் எப்படி நினைக்கிறார்கள்?” என்பதல்ல கேள்வி. அல்லது “நாம் என்ன நினைக்கிறோம்?” என்பதுமல்ல. உண்மையான கேள்வி யாதெனில் “தேவன் எதை விரும்புகிறார்?” என்பதுதான். ஆவியோடும் உண்மையோடும் மட்டுமே தொழுது கொள்வோமாக.*

---

குறிப்புகள்

*[1]இந்தப் பாடம் காய் ரோப்பர் செய்த இரண்டு பிரசங்கங்களாகிய “ஆவியோடும் உண்மையோடும் தொழுது தேவனிடத்தில் சேருதல்” எனும் தலைப்பிலிருந்து எடுக்கப் பட்டது, இது ஆஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லேண்ட் மாநிலத்தின் டூவூம்பா கிறிஸ்துவின் சபையில் பிரசங்கிக்கப் பட்டது, நாள் அக்டோபர் 2003. [2]நன்றியுள்ள இருதயம் தேவனுக்கு எப்படித் துதிகளை ஏறெடுக்கிறது என்பதை அநேக சங்கீதங்கள் விளக்கமளிக்கின்றன. உதாரணத்திற்கு, சங்கீதம் 136:1; 100:4, 5; 95:2 ஆகியவைகளைக் காண்க.*